**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**------------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 87/2007 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **புகழேந்தி** |
| Father’s / Husband Name | : | **பக்கிரிசாமி** |
| Address | : | **புருஷோத்தமன் தெரு, அரியலூர்** |
| Age | : | 62/2025 |

**<u>தேதி : 12.02.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தீயணைப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது அரியலூரில் வசித்து வருகிறேன். நான் இதற்கு முன்பு பெரம்பலூரில் தீயணைப்பு வீரராக பணிபுரிந்தபோது 20.02.2000 ம் தேதி நான் பெரம்பலூர் தீயணைப்பு நிலையத்தில் பணியில் இருந்தபோது ரோவர் கல்லூரி, தண்ணீர் பந்தல் அருகே விபத்து நடந்ததாக எங்களுக்கு தகவல் வந்தது. அந்த இடத்திற்கு நானும், ட்ரைவர் பெரியண்ணன் என்பவருடன் ஆம்புலன்ஸில் சென்றோம். நாங்கள் அங்கு செல்வதற்குள் விபத்தில் காயம்பட்டவர்களை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றுவிட்டததாக சொன்னார்கள். நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று விசாரித்தபோது ராஜா என்பவர்

இறந்துவிட்டதாகவும், கருணாநிதி என்பவரை மேல் சிகிச்சைக்காக திருச்சிக்கு ்அழைத்து சென்றுவிட்டதாகவும் பணியில் இருந்த மருத்துவர் என்னிடம் சொன்னார். அதன்பிறகு நான் என்னுடைய தீயணைப்பு நிலையத்திற்கு திரும்ப சென்றுவிட்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

20.02.2000ம் தேதி அன்று நான் பணியில் இருந்ததற்கான ஆவணங்களை போலீஸாரிடம் ஒப்படைத்தேனா என்றால் மேல் அதிகாரிகள்தான் ஒப்படைக்க வேண்டும். 20.02.2000ம் தேதி அன்று நான் பணியில் இருந்ததற்கான ஆவணங்களை போலீஸார் என்னிடம் கேட்டுபெற்றார்களா என்றால் ஞாபகமில்லை. நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றதற்காக விபத்து நடந்த இடத்தில் உள்ளவர்களிடம் ட்ரிப் சீட்டில் கையெழுத்து பெற்றேனா என்றால் ஞாபகமில்லை. எங்களுடைய அலுவலகத்தில் உள்ள தகவல் பதிவேட்டில் எனக்கு தகவல் கொடுத்தவர்களின் பெயர் பதிவு செய்தேனா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. நாங்கள் தீயணைப்பு நிலையத்திலிருந்து புறப்பட்ட நேரம் திரும்பி வந்த நேரம் ஆகியவற்றை பதிவு செய்த பதிவேட்டை காவல் துறையினர் என்னிடமிருந்து விசாரித்து பெற்றார்களா என்றால் ஞாபகமில்லை.

எந்த மருத்துவரிடமிருந்து நான் விபரம் கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் ஞாபகமில்லை. சம்பவ தேதியில் நான் பணியில் இல்லை என்றாலும், போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் ஞாபகமில்லை, 06.03.2006 என்று நினைக்கிறேன். 06.03.2006 அன்று அரியலூரில் ்பணியில் இருந்த விவரத்தை போலீஸாரிடம் சொன்னேன்

என்றால் சரிதான். மேற்கண்ட குறுக்கு விசாரணையை இரண்டாவது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.